# தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

**முன்னுரை**

மகளிரை முழுமையாக ஆற்றல்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் 1983ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சமூக ஒருங்கிணைப்பின் மூலம் மகளிரை சுய உதவிக் குழுக்களாக அமைத்து சேமிப்பு மற்றும் சிக்கனத்தை கடைப்பிடிக்க பயிற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்கள் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவி பெற்ற மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக 1991–92–ம் ஆண்டு தொடங்கப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளில், சுய உதவிக் குழு இயக்கம் மாநிலத்திலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் பரந்து விரிந்துள்ளது. தற்போது மகளிர் திட்டத்தின் கீழ் 85.70 இலட்சம் மகளிரைக் கொண்ட 5.56 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் இரு பெரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

I. மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் ‘‘மகளிர் திட்டம்’’,

II. மத்திய, மாநில அரசுகளால் 75:25 என்ற விகிதத்தில் நிதி பங்கீட்டுடன் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமான பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SGSY) மறுசீரமைக்கப்பட்டு **“ஆஜீவிகா”** என்ற பெயரில் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கமாக (NRLM) தொடங்கப்படவுள்ளது.

**I. மகளிர் திட்டம்**

**மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள்**

1. புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்
2. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி
3. கலாச்சாரப் போட்டிகள்
4. திறன் பயிற்சி
    - அ) இளைஞர் தொழில் திறன் பயிற்சி
    - ஆ) தொழில் மேம்பாட்டுப் பயிற்சி
5. சுயஉதவிக் குழுக்களுக்குக் கடனுதவி
    - அ) சுழல் நிதி
    - ஆ) வங்கிகள் மூலமான கடன் இணைப்பு
6. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல்

அ) ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைத்தல் மற்றும் திறன் மேம்பாடு

ஆ) குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்புகளை உருவாக்குதல்

இ) ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்குப் பெருங்கடன்

7. சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்

8. சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் வங்கிகளுக்கான விருதுகள்.

## I.1. சுய உதவிக் குழு அமைத்தல்

இதுவரை சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படாத மக்களிடையே குழுக்கள் அமைப்பதும், சுய உதவிக் குழுவில் இதுவரை இணைக்கப்படாத மகளிரை குழுக்களில் இணைப்பதும் குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், திருநங்கைகள், நலிவுற்றோர் மற்றும் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியோரை சிறப்புக் கவனம் செலுத்தி சுய உதவிக் குழுக்களில் சேர்ப்பதும் நோக்கமாகும். ஒத்த கருத்துடைய ஏழை மகளிர் தாமாகவே முன் வந்து தங்கள் வளர்ச்சிக்காக ஒன்று சேர்ந்து சேமிப்பினை பெருக்கிடவும், குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து ஆலோசித்து ஒரு குறிப்பிட்டத் தொகையினை வாரம் அல்லது மாதந்தோறும் சேமித்து, தங்களுக்குள்ளேயே சிறுகடன் கொடுத்து உதவிக்கொள்ளும் ஒரு சிறு குழு அமைப்பதே சுய உதவிக் குழுவாகும். இக்குழுவில் 12 லிருந்து 20 மகளிர் உறுப்பினர்களாக இருக்கலாம். குழு உறுப்பினர்கள் 18 முதல் 60 வயது உடையவர்களாக இருக்க வேண்டும்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், அங்கீரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளைப் பங்குதாரர்களாக இணைத்து கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், பயிற்சி அளித்தல், வழிநடத்துதல் மற்றும் அவர்களின் செயல்பாடுகளை கண்காணித்தல் போன்ற பணிகளை செயல்படுத்தி வருகிறது.

பணியின் தரத்திற்கு முக்கியத்துவம் அளித்தல் அதற்கேற்ப செயல்திறன் ஊக்குவிப்புத் தொகை வழங்குதல் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பைச் சமுதாயம் சார்ந்த அமைப்பாக உருவாக்குதல் போன்ற சிறப்பம்சங்கள் தொண்டு நிறுவனங்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ளன. இது தவிர, சுய உதவிக் குழுக்களை அமைப்பதில் பயிற்சி தருவதற்காகத் தொண்டு நிறுவனங்களுக்கு குழு அமைப்புத் தொகை, குழு கண்காணிப்புத் தொகை மற்றும் சுய உதவிக் குழுக்கள் வங்கியை அணுகி கடன் பெற உதவி செய்வதற்காக ஊக்கத் தொகை ஆகியன தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இத் தொண்டு நிறுவனங்களின் செயல் திறன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் மதிப்பீடு செய்யப்படுகிறது. மிகவும் அவசியமான கீழ்கண்ட தேவைகளின் அடிப்படையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தெரிவு செய்யப்படுகின்றன.

**அ. அரசு சாரா தொண்டு நிறுவனங்களை அங்கீரித்தல் – தகுதிக்கான முறைகள்**

- ○ பதிவு செய்யப்பட்டு மூன்று வருடங்களுக்கு மேல் செயல்பட்டு வரும் சிறந்த தொண்டு நிறுவனமாக இருக்க வேண்டும்.
- ○ குறைந்த பட்சமாக 1500 சதுர அடி அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பயிற்சி கூடத்துடன், தகவல் தொடர்பு வசதிகள் மற்றும் தேவையான பணியாளர்கள் இருத்தல் வேண்டும்.
- ○ குறைந்த பட்சமாக கடன் இணைப்பு பெற்ற 100 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கொண்டதாகவும் 50 குழுக்களுக்கு ஒரு தொகுதி ஒருங்கிணைப்பாளரும் இருக்க வேண்டும்.

அரசு சாரா தொண்டு நிறுவனங்களை மதிப்பீடு செய்யும் நிலையில் கீழ்காணும் ஐந்து அளவு கோல்களின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது.

- ○ மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் செயல்பாட்டு வல்லுநர்கள் பணியிலிருக்க வேண்டும்.
- ○ கீழ்நிலைப் பணியாளர்கள் தேவையான எண்ணிக்கையில் இருக்க வேண்டும்
- ○ வங்கிக் கடன் இணைப்பு செய்யப்பட்ட விவரம்
- ○ வங்கிக் கடன் தொகையின் அளவு
- ○ அரசு மற்றும் வங்கிகளிடமிருந்து பெறப்படும் விருதுகள்

**ஆ. அரசு சாரா தொண்டு நிறுவனங்களை மதிப்பீடு செய்யும் முறைகள்**

**செயல்படுத்தப்பட்ட பணிகளின் அளவு சார்ந்த மதிப்பீடு**

செயல்படுத்தப்பட்ட பணிகளின் அளவு சார்ந்த மதிப்பீடு, அரசு சாரா தொண்டு நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் திட்ட செயலாக்க அலகிலிருந்தும் பெறப்படும் புள்ளி விவரங்கள் அடிப்படையில் செய்யப்படுகிறது. (குழு அமைத்தல், பயிற்சி, வங்கிக் கடன் இணைப்பு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நேரடி உதவிகள்).

**இ. தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் சேவைகளுக்கான கட்டணங்கள்**

- சுய உதவிக் குழு தொடங்கப்பட்டு பயிற்சிகள் முடித்து, மூன்று மாதமான பின் குழு அமைப்பு தொகையாக ஒரு குழுவிற்கு ரூ.350 வீதம் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

- சுய உதவிக் குழு ஆரம்பித்து ஆறு மாதம் முடிவுற்ற பின், உறுப்பினர் மற்றும் பிரதிநிதிகள் பயிற்சி முடித்து, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இணைந்த குழுக்களுக்கு குழு பராமரிப்புத் தொகையாக ஒரு குழுவிற்கு ரூ.300 வீதம் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

- கடன் இணைப்பு ஊக்கத் தொகையாக வங்கிக் கடன் தொகையின் அடிப்படையில், முதல் கடன் இணைப்பிற்கு 0.5%மும், இரண்டாவது கடன் இணைப்பிற்கு 0.75% மும், மூன்றாவது மற்றும் அதற்கு மேலும் பெறப்படும் கடன் இணைப்பிற்கு 1%மும் ஊக்கத் தொகையாக தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. தொண்டு நிறுவனங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சமுதாய அமைப்புகளுக்கு அனைத்து கடன் இணைப்புகளுக்கும் எந்தவிதமான விதிவிலக்குமின்றி ஊக்கத் தொகை 4 வருடங்களுக்கு வழங்கப்படும்.

- குழுக்கள் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அவைகளை ஊக்குவித்து தேவைக்கேற்ப இயந்திரகள், மூலப்பொருட்கள் ஆகியவற்றை கண்டறியவும் சந்தைப்படுத்துதல், ஆவணப்படுத்துதல் போன்றவற்றிற்கு உறுதுணையாக இருக்கும் பட்சத்தில் தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு குழுவிற்கு ரூ,2500/– வீதம் ஊக்கத் தொகை வழங்கப்படும். அவ்வாறு மேற்கொள்ளும் தொழிலுக்கான திட்ட மதிப்பீடு ரூ.1.5 இலட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும்.

### I.2. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கான திறன் பயிற்சி

மகளிர் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட குழுக்களுக்கும் குழுக்களின் நிர்வாகிகளுக்கும் ஒற்றுமையாகவும், சிறப்புடனும் செயல்பட முறையான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் பயிற்சி 4 பாடத் திட்டங்களாக 4 நாட்களில் அளிக்கப்படுகிறது. சுய உதவிக்குழு நிர்வாகிகளான ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோருக்கு 6 நாட்களில் 3 பாடத் திட்டங்களாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த பயிற்சிகள் குழுவை வழி நடத்திச் செல்லும் தலைமைப் பண்பு, குழுவாகச் செயல்படும் திறன் மற்றும் கணக்குப் பதிவேடுகளை பராமரிக்கும் முறை ஆகியவற்றை மேம்படுத்த உதவுகின்றன.

சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதி திறன் பயிற்சிகளுக்கான விவரங்கள் பின்வருமாறு :

- ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோருக்கு 6 நாட்களில் 3 பாடத் திட்டங்களாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
    - பயிற்சி தொகை உறுப்பினர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ.67.50 (உறுப்பினருக்கு ரூ.45/– , பயிற்சியாளருக்கு ரூ.10/– மற்றும் நிறுவன செலவினங்களுக்காக ரூ.12.50) ஆகும்.

- உறுப்பினர் பயிற்சி 4 பாடத் திட்டங்களாக 4 நாட்களில் அளிக்கப்படுகிறது.

- ○ பயிற்சி தொகை உறுப்பினர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ.65/– (உறுப்பினருக்கு ரூ.45/–, பயிற்சியாளருக்கு ரூ.7.50 மற்றும் நிறுவன செலவினங்களுக்காக ரூ.12.50) ஆகும்.

## I.3. மகளிர் சுய உதவிக்குழுக்கள் ஒன்றிணைந்து, ஒற்றுமையுடன் செயல்படுவதை மேம்படுத்த கலாச்சாரப் போட்டிகள்

மகளிர் சுய உதவிக்குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஒற்றுமை, கூட்டு முயற்சி மற்றும் ஒருங்கிணைந்த செயல்பாடுகளை வலுப்படுத்த வட்டார மற்றும் மாவட்ட அளவில் கலாச்சாரப்போட்டிகள் நடத்தப்படுகிறது. இந்த கலாச்சாரப் போட்டிகள் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கிடையே மிகச் சிறப்பான வரவேற்பு பெற்றதோடு, மகளிரிடையே கூட்டு முயற்சி மற்றும் ஒற்றுமையை ஏற்படுத்துவதிலும், மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்ந்து குழுமனப்பாங்கை உறுதி செய்வதிலும் வெற்றி கண்டுள்ளது.

கோலப்போட்டி, பேச்சு போட்டி, பாட்டுப்போட்டி, நாடகப்போட்டி போன்ற போட்டிகள் வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படுகின்றன. வட்டார அளவில் ரொக்க பரிசாக முறையே ரூ.500/–, ரூ.300/– மற்றும் ரூ.200/– முதல், இரண்டு மற்றும் மூன்றாம் பரிசாக வழங்கப்படுகிறது. மேலும் மாவட்ட அளவில் ரொக்க பரிசாக முறையே ரூ.5000/–, ரூ.3000/– மற்றும் ரூ.2000/– முதல், இரண்டு மற்றும் மூன்றாம் பரிசாக வழங்கப்படுகிறது.

## I.4. இளைஞர் மற்றும் மகளிருக்கான திறன் பயிற்சி

### அ. இளைஞர்களுக்கான திறன் பயிற்சி

படித்த இளைஞர்கள் மத்தியில் வேலைவாய்ப்பின்மை முரண்பாடான சூழலை வெளிப்படுத்துவதாக உள்ளது. படித்த கிராமப்புற இளைஞர்கள் மத்தியில் பெரிய அளவிலான வேலைவாய்ப்பின்மை ஒருபுறமும், அதே சமயத்தில் சில தொழில்கள் மற்றும் வணிக தொகுப்புகளுக்குத் திறனுள்ள மனித வளப் பற்றாக்குறை மறுபுறமும் உள்ளது. கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை சார்ந்த திறன் பயிற்சி வழங்குவதன் மூலம், மேற்கண்ட சூழ்நிலையை மாற்றி, தொழில் திறனுள்ள மனிதவள இடைவெளியை சரி செய்ய இயலும்.

2011 - 12 ஆம் ஆண்டில், இளைஞர் தொழில் திறன் பயிற்சிக்கான வழிகாட்டு நெறிமுறைகளை சீர்படுத்தி, பாடத்திட்டங்களை நிலைப்படுத்தி, பயிற்சி நிறுவனங்களை அங்கீகரித்து, தரமான பயிற்சி மூலம் 80% இளைஞர்களுக்கு மாதத்திற்கு குறைந்தபட்சம் ரூ.4000/- ஊதியத்துடன் வேலைவாய்ப்பு வழங்குவதை உறுதி செய்ய இவ்வரசு முயற்சிகளை மேற்கொண்டது. மேலும் தேசிய தொழில் பயிற்சி மையம் (NCVT) மற்றும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி தலைமை இயக்குநர் (DGET) ஆகியோரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பாடத்திட்டங்களை கொண்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் மாற்றுத்திறனாளிகள் (3%), அட்டவணை வகுப்பினர் மற்றும்

பழங்குடியினர் (25%), திருநங்கையர் (5%) மற்றும் சிறுபான்மையினர் (3.5%) பிரிவைச் சேர்ந்த இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கவும் உறுதி செய்யப்பட்டது.

2011–12 ஆம் ஆண்டில் முன்னோடித் திட்டமாக “திறன் ரசீது திட்டம்” (Skill Voucher Scheme) கணினி பயிற்சிக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, ஹெச் சி எல் (HCL), சி.எஸ்.சி (CSC) மற்றும் அப்பல்லோ (Apollo) போன்ற அங்கீகரிக்கப்பட்ட கணினி பயிற்சி நிறுவனங்களில் இளைஞர்கள் தாங்கள் விரும்பும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து, விருப்பப்பட்ட பயிற்சிகளில் சேர வழிவகை செய்யப்பட்டு இளைஞர்களுக்கு அலைபேசி பாகங்களை இணைத்தல், ஜே சி பி (JCB) இயக்குபவர், சி என் சி லேத் (CNC lathe) இயக்குபவர், கணினி பயிற்சிகள் போன்ற பல்வேறு வகையான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

**இளைஞர்களுக்கான திறன் பயிற்சி செயலாக்க விவரம்**

- ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த 18 முதல் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்காக வழங்கப்படுகிறது.
- மத்திய மற்றும் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்டு, தேசிய தொழில் கல்வி நிறுவனம், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி தலைமை இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பாடத் திட்டங்களுடன் நடத்தப்படும் பயிற்சி நிறுவனங்கள் தேர்வு செய்யப்படும்.
- இதற்கான பயிற்சி தொகை நபர் ஒன்றுக்கு ரூ. 8,000 ஆகும். இதில் பயிற்சி பெறும் நபருக்கு நாளொன்றிற்கு உதவித் தொகையாக ரூ.35, மொத்த பயிற்சி காலத்திற்கு ரூ. 3,000க்கு மிகாமல் வழங்கப்படும்.
- பயிற்சி காலம் 45 நாட்கள் முதல் ஆறு மாதங்கள்
- பயிற்சி பெற்ற 80 % இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கிய பின்னரே பயிற்சி நிறுவனங்களுக்கு இறுதியான 20% பயிற்சி தொகை வழங்கப்படும்.
- பயிற்சியினை முடித்த இளைஞர்களுக்கு தேசிய தொழில் கல்வி நிறுவனம் மற்றும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி தலைமை இயக்குநர் அவர்களால் தகுதித் தேர்வு நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.
- தொழில் நிறுவனங்கள் மற்றும் இளைஞர்களின் தேவையை பூர்த்தி செய்ய வேலை தேடுவோர்க்கான வேலை வாய்ப்பு முகாம்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படும்.
- 2011–12 ஆம் ஆண்டில் முன்னோடித் திட்டமாக “திறன் ரசீது திட்டம்” (Skill Voucher Scheme) கணினி பயிற்சிக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட கணினி பயிற்சி நிறுவனங்களில் இளைஞர்கள் தாங்கள் விரும்பும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து, விருப்பப்பட்ட பயிற்சிகளில் சேர வழிவகை செய்யப்பட்டது. பயிற்சி முடிந்த பின் திறன் ரசீதை திட்ட செயலாக்க அலகில் கொடுத்து அதற்குரிய கட்டணத்தை பயிற்சி நிறுவனங்கள் பெற முடியும்.

- திறன் ரசீது திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து இது மற்ற பாடப் பிரிவுகளுக்கும் விரிவுப்படுத்தப்படும்.

### ஆ. தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம்

சுய தொழில் பயிற்சி அளிப்பதில் நிபுணத்துவம் பெற்ற பயிற்சி நிறுவனங்களின் மூலம் சுயமாகவோ அல்லது குழுவாகவோ சுய தொழில் மேற்கொள்ள ஆர்வமுள்ள மகளிருக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் வழங்கப்படுகிறது. மூலப்பொருட்கள் கொள்முதல், இயந்திரங்கள், மதிப்புக்கூட்டுதல், பேக்கேஜிங், பெயரிடுதல், விலை நிர்ணயித்தல் மற்றும் சான்றளித்தல் போன்ற அம்சங்களை உள்ளடக்கி இப்பயிற்சி வழங்கப்படுகிறது.

- 18 முதல் 60 வயதுக்குள் உள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்கள் இத்தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி திட்டத்திற்கு தகுதியானவர்கள் ஆவர். இதில் நகர்புறங்களில் வசிக்கும் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- மேலும் 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.
- உதவித்தொகையாக உறுப்பினர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ.25 வழங்கப்படும்.
- பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பாடப்பிரிவுகள் தேர்வினை மாவட்ட அளவிலான குழு தீர்மானிக்கும்
- பாடப்பிரிவுகளுக்கான பயிற்சிக் காலம் 45 நாட்கள் முதல் மூன்று மாதங்கள் வரை.
- பயிற்சி முடித்தவர்களுக்கு தொழில் தொடங்க வங்கிக் கடன் பெற வழிவகை செய்யப்படும்

## I.5. சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் உதவி

### அ. நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி

குறைந்தபட்சம் ஆறு மாத காலம் முடிவுற்ற சுயஉதவிக் குழுக்கள், முதல் தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்றிருப்பின் அக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்படுகிறது. குழுக்களின் ஆதார நிதி உயரவும், சிறிய வருமானம் ஈட்டக் கூடிய தொழில்களை மேற்கொள்ளவும், அல்லது உடல் நலம் பேணுவதற்காகவும் அல்லது கல்வித் தேவைக்காகவும் இந்த நிதியிலிருந்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடன் வழங்க பயன்படுத்தப்படுகிறது. ஆறு மாதத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் பொருளாதாரக் கடன் பெறும் தகுதியினை சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஊரக பகுதி சுய உதவிக் குழுக்களுக்கு பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் சுழல் நிதி மானியமாக 2010–11 வரை ரூ.10000–மும், 2011–12–ல் ரூ.15,000/– மானியமாகவும், வங்கி கடனாக ரூ.50,000/–மும் வழங்கப்படுகிறது. மேலும் நகர்ப்புற சுய

உதவிக் குழுக்களுக்கு மகளிர் திட்டத்தின் கீழ் சுழல் நிதி மானியமாக ரூ.10,000/– மற்றும் வங்கி கடனாக ரூ.50,000/– வழங்கப்படுகிறது.

**ஆ. வங்கிகள் மூலம் கடனுதவி**

சுய உதவிக் குழுக்கள் கந்து வட்டிக்காரர்களின் பிடியில் சிக்கி, நாளடைவில் கடனாளியாக மாறி விடுகின்றனர். வருமானம் ஈட்டக் கூடிய தொழில்களை மேற்கொள்ள வங்கிகள் குறைந்த வட்டியில் கடன் அளிப்பதால் சுய உதவிக் குழுக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைகின்றன. வங்கிகள் மூலம் முதல் கடன் இணைப்பாக வழங்கப்பட்ட ரூ.50,000/– பின்னர் தொடர் கடன் இணைப்புகளாக ரூ. 1 இலட்சமாகவும் ரூ.1.50 இலட்சமாகவும் வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் நிலைத்த தன்மையை அடைய இரண்டாவது மறுகடன் மற்றும் தொடர் மறுகடன் இணைப்பு, வங்கிகள் மூலமாக வழங்குவது அவசியமாகிறது.

**I.6. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகளை**

**வலுப்படுத்துதல்**

**அ. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைத்தல் மற்றும் திறன் வளர்த்தல்**

மகளிர் சுய உதவிக் குழுக்களின் இயக்கத்தை வலுப்படுத்தி நிலைத்த தன்மை உடையதாக்க ஊராட்சி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழுக் கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு வருகிறது.

சுய உதவிக் குழுக்கள் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், குறைகளை வெளிப்படுத்துவதற்கும், ஒன்று கூடித் தீர்வு காண்பதற்கும் ஒரு பங்கேற்புக் களமாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அமைகிறது. சுய உதவிக் குழுக்கள் தனியாக சாதிக்க முடியாததை, அவை கூட்டமைப்பில் இணைந்து தங்களுடைய ஒட்டு மொத்த ஆற்றலையும் வளங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலமாக சாதிக்கலாம். பொருட்களை கொள்முதல் செய்வதிலும் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதிலும் கூட்டமைப்புகள் பயனுள்ள வகையில் செயலாற்றலாம். கூட்டமைப்புகள் தங்களது ஊராட்சிகளில் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்து பயிற்சிகள் வழங்கி அவற்றை வழிநடத்தி கண்காணிக்கும் பணியையும் மேற்கொள்ளலாம். சுய உதவிக் குழுக்களின் பொதுவான இலட்சியங்களை பிரதிபலிக்கின்ற வலுவான மற்றும் ஒற்றுமையான கூட்டமைப்புகளை அமைப்பதே வருங்காலங்களில் நிலைத்த தன்மையினை அடைய வழிவகுக்கும்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஒருங்கிணைந்த, வெளிப்படைத் தன்மை வாய்ந்த மக்கள் இயக்கமாக விளங்கவும், அவற்றை தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975ன் கீழ் பதிவு செய்து சட்ட அங்கீகாரம் வழங்கி அவற்றின் நிர்வாக திறன் மற்றும் நிலைத்த தன்மையை மேம்படச் செய்வதே கூட்டமைப்புகளை மறுசீரமைப்பதின் தலையாய நோக்கமாகும்.

பதிவு செய்யப்பட்டதிலிருந்து ஆறு மாதங்கள் முடிந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பங்கேற்பு, உள்ளாக்கம், நிர்வாகத்திறன், வெளிப்படைத் தன்மை, கடனை திருப்பிச் செலுத்துதல் மற்றும் சமூக நல முயற்சிகள் ஆகிய காரணிகளின் அடிப்படையில் தரம் மதிப்பீடு செய்யப்படும். இதில் தேர்வு பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதியை உயர்த்த, ஒரு இலட்சம் ரூபாய் ஊக்க நிதியாக வழங்கப்படும்.

கீழ்க் கண்ட பயிற்சிகள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகளுக்கும், செயற்குழு உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகிறது.

- நிர்வாகிகளுக்கான நிர்வாகத் திறன் பயிற்சி
    - களப் பயணத்துடன் மூன்று நாட்கள் உறைவிட பயிற்சியாக பயணப்படியுடன் வழங்கப்படுகிறது.
- நிதி மேலாண்மை பயிற்சி
    - மூன்று நாட்கள் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் கணக்காளருக்கு உறைவிட பயிற்சியாக பயணப்படியுடன் வழங்கப்படுகிறது.
- தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தில் தொண்டு நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகளுக்கான பயிற்சி
    - மூன்று நாட்கள் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் கணக்காளருக்கு உறைவிட பயிற்சியாக பயணப்படியுடன் வழங்கப்படுகிறது.
- செயற்குழு உறுப்பினர்களுக்காகன பயிற்சி
    - மூன்று நாட்கள் பயிற்சி ஊராட்சி அளவிலேயே வழங்கப்படும். ஊக்குநர் மற்றும் பிரநிதிக்கான பயிற்சிகளில் வழங்கப்படுவது போல் உறுப்பினர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ.67.50 செலவிடப்படும்.
- குடியிருப்பு மன்ற நிர்வாகிகளுக்கான பயிற்சி
    - இரண்டு நாட்கள் பயிற்சி ஊராட்சி அளவிலேயே வழங்கப்படும். ஊக்குநர் மற்றும் பிரநிதிக்கான பயிற்சிகளில் வழங்கப்படுவது போல் உறுப்பினர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ.67.50 செலவிடப்படும்.

### ஆ. குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகள் அமைத்தல்

நகர்ப்புற குடிசைப்பகுதிகளில் உள்ள ஏழைப் பெண்கள் சுய உதவிக் குழு இயக்கத்தில் இணைந்து பயனடையும் வகையில், நகர்ப்புறங்களில் சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன. நகர்ப்புற ஏழைப் பெண்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு ஒரு நிறுவன அமைப்பை அளிப்பதற்காக குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகள் (SLFs), சட்ட ரீதியான

அங்கீகாரம் பெறுவதற்கு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-ன் கீழ் பதிவு செய்யப்படுகின்றன.

**இ. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்குப் பெருங்கடன்**

சுய உதவிக் குழுக்களின் பல்வேறு செயல்பாடுகளில் பக்கபலமாக விளங்கி வழிநடத்திச் செல்லும் ஓர் வலுவான மையமாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாகி வருகின்றன. நிதி இடையீட்டாளராக செயல்படுவது ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் முக்கிய பொறுப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகளிலிருந்து கடன் பெற்று, உறுப்பினர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்குகின்றன. இக்கடன்களுக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் 3.5 விழுக்காடு வட்டி கூடுதலாக வைத்து, 15 விழுக்காட்டிற்கு மிகாமல் வட்டி நிர்ணயம் செய்கின்றனர். இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், காலப்போக்கில் சமுதாய அளவிலான நிதி நிறுவனங்களாக உருவெடுக்கும்.

தர மதிப்பீட்டில் தேர்வு பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கடன் விண்ணப்பம் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு, கடன் தேவை மற்றும் நுண்கடன் திட்டத்தின் அடிப்படையில் பெருங்கடனுக்கான தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது. பொதுவாக பெருங்கடன் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர் குழுக்களின் எண்ணிக்கை அடிப்படையில் ரூ.20 இலட்சம் முதல் ரூ.40 இலட்சம் வரை பெறப்பட்டு, உறுப்பினர் குழுக்களுக்கு அவர்களது தேவையின் அடிப்படையில் குடும்பச் செலவுகள் அல்லது ஏதேனும் தொழில் செய்ய கடனாக வழங்கப்படுகிறது.

**I.7. சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துதல்**

சுய உதவிக் குழுக்கள் தங்களது பொருட்களை சந்தையில் விற்பனை செய்ய சந்தை நிலவரம் தெரியாமலும் மற்றும் வணிகப் பேச்சுவார்த்தை நடத்தப் போதுமான திறமை குறைவாக உள்ளதாலும், அவர்களுக்கு உதவிடும் வகையில், சுய உதவிக்குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பையும், இணக்கத்தையும் ஏற்படுத்த இந்த அரசினால் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சுய உதவிக் குழுக்களின் பொருட்களை சந்தைப்படுத்த மாநில அளவில் ஒரு நிரந்தரமான வணிக வளாகம் சென்னையில், நுங்கம்பாக்கத்தில் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இங்கு சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களின் விற்பனை மற்றும் கண்காட்சி நடத்தப்பட்டுவருகிறது. நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் சுய உதவிக் குழுக்களின் விற்பனையை மேம்படுத்தும் வகையில் விற்பனை மற்றும் கண்காட்சி அட்டவணை ஆண்டுதோறும் தயாரிக்கப்பட்டு மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதில் கண்காட்சிகள் முக்கிய பங்கு வகிப்பது நிரூபணமாகியுள்ளது. மாவட்ட மற்றும் மாநில அளவில் மகளிர் சுய

உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை அறிமுகப்படுத்தி, சந்தைப்படுத்த கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. புது தில்லியில் நடைபெற்ற இந்திய பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி மற்றும் இந்திய அரசின் ஊரக வளர்ச்சி துறையின் மூலம் நடத்தப்படும், மண்டல அளவிலான "சாராஸ்" (SARAS) கண்காட்சிகளிலும் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று வருகின்றன.

## I.8. சிறப்பாகச் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் வங்கிகளுக்கான விருதுகள்

தமிழ்நாடு அரசு, சிறப்பாகச் செயல்படும் சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்திறனுக்கு அங்கீகாரம் வழங்க மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் விருதுகள் வழங்கி வருகின்றது. இவ்விருதுகள் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை ஊக்குவிப்பதோடு அவைகளுக்குள் ஆரோக்கியமான போட்டியையும் உருவாக்குகின்றன. ஆண்டுதோறும், மாநில அளவில் சிறந்த ஐந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், 10 சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் ரொக்க பரிசாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மாவட்ட அளவில், ஒரு சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு ரொக்க பரிசாக ஒரு இலட்ச ரூபாயும், மூன்று சிறந்த மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு தலா 25,000 ரூபாயும் ரொக்க பரிசாக வழங்கப்படுகிறது. வட்டார அளவில், சிறப்பாக செயல்படும் ஒரு சுய உதவிக் குழுவிற்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

சுய உதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டில் வங்கிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கடன் வழங்குவதில் மிகச் சிறப்பாகச் செயல்படும் வங்கிகளுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் விருதுகள் வழங்கப்பட்டுவருகிறது. மாநில அளவில் மூன்று சிறந்த வங்கிகளுக்கும், ஐந்து வங்கிக் கிளைகளுக்கும் விருதுகள் வழங்கப்பட்டுவருகிறது. மாவட்ட அளவில் ஒரு சிறந்த வங்கி மற்றும் மூன்று வங்கிக் கிளைகள் இவ்விருதினைப் பெறுகின்றன.

மாநில அளவில் சிறந்த வங்கிகளுக்கு நினைவு பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. சிறந்த வங்கி கிளைகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ஒரு இலட்சம் ரூபாய், 75,000 ரூபாய் மற்றும் 50,000 ரூபாய் ரொக்கமாக வழங்கப்படுகிறது. மாவட்ட அளவில் சிறந்த வங்கிக்கு நினைவு பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. சிறந்த வங்கி கிளைகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே 15,000 ரூபாய், 10,000 ரூபாய் மற்றும் 5,000 ரூபாய் ரொக்கமாக வழங்கப்படுகிறது. இவ் விருதுகள் மூலம் வங்கிகள் மற்றும் வங்கிக் கிளை மேலாளர்கள் சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான அளவு, உரிய காலத்தில் கடன் வழங்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

## I.9. முற்றம் சொசைட்டி

- முற்றம் சொசைட்டி 1975 ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் 08.03.1998 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும்.
- மகளிர் நலம் தொடர்பான அனைத்து தகவல்களையும் திரட்டி செய்தி கடிதங்கள் மற்றும் மாதாந்திர வெளியீடுகளின் மூலம் பரவலாக்கம் செய்தல்.
- மகளிர் மேம்பாட்டிற்காக செயல்படும் அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு இடையே தகவல் பரிமாற்றம் செய்யும் சாதனமாக செயல்படுதல்
- மேலும், கிராம மகளிர் சுயமாக சிந்தித்து செயல்படுவதற்கு ஊக்கமளிக்கும் விதமாக தகவல் பரிமாற்றங்களையும் அனுபவப் பகிர்வையும் முற்றம் ஊக்குவிக்கிறது.

## II.பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டம் (SGSY)

பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம், 1999–ம் ஆண்டு ஏப்ரல் முதல் மத்திய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டு, மாநில அரசினால் செயல்படுத்தப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் போதுமான மற்றும் நிலையான வருமானத்தை ஏற்படுத்தித் தருவதன் மூலம் வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்தும் முக்கியமான வறுமை ஒழிப்புத் திட்டமாக இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழை மகளிரைச் சென்றடையவும் அவர்களை நுண்கடன் பெறும் நிலையிலிருந்து சிறுதொழில்கள் முனைவோர் நிலைக்குப் படிப்படியாக உயர்த்தும் நோக்கத்திற்கும் சுய உதவிக் குழு முறை கடைப்பிடிக்கப்படுகிறது. இக் குறிக்கோளை அடைவதற்கு இவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிப்பதுடன், பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்றுத் தந்தும் இவர்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் செலவினத்தை மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

### பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கூறுகள்

1. சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல்

ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாதம் முடிவுற்று தர மதிப்பீட்டில் தேர்ச்சிப் பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கு முதல் கடன் உதவியாக சுழல் நிதி வழங்கப்படுகிறது. 2010–11 வரை ஊரகப் பகுதிகளில் சுழல் நிதி மானியமாக ரூ. 10,000மும், 2011–12ம் ஆண்டில் மட்டும் சுழல் நிதி மானியமாக ரூ.15,000மும் , வங்கிக் கடனாக ரூ.50,000மும் வழங்கப்பட்டது.

2. சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார உதவி வழங்குதல்

பொன் விழா சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார கடன் ரூ. 5.00 இலட்சம் வரை திட்ட மதிப்பீட்டில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம் மானியத்துடன் வழங்கப்படுகிறது. இதனைப் பெற சுய உதவிக் குழுக்கள் முதல் கடன் இணைப்பான சுழல் நிதி பெற்று ஆறு மாதங்கள் முடிந்திருக்க வேண்டும்.

3. பயிற்சி அளித்தல்

குறிப்பிட்ட பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தேவையான திறனை மேம்படுத்துவதற்கு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

4. கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

ஒத்த தொழில்களில் ஈடுபட்டு வரும் சுய உதவிக் குழுக்களின் பயன்பாட்டிற்காக பொது கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது.

சுய உதவிக் குழுக்கள் பயன் பெறும் வகையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பெரிய அளவில் ஒருங்கிணைப்பதற்காக திட்டத்தின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### II.1. ஆஜீவிகா – தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

மத்திய அரசு வருமானம் தரக்கூடிய சொத்துக்கள், வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தந்து ஏழை மக்களது வறுமையை ஒழிக்கும் நோக்கத்தில் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சமூக ஒருங்கிணைப்பு அணுகு முறையில் சுய உதவிக் குழுக்களாக, ஏழைக் குடும்பங்களை பெண்கள் மூலம் சென்றடையும் பொருட்டு பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத்திட்டம் (SGSY) உருவாக்கப்பட்டது. எனினும், வறுமை ஒழிப்பு என்ற பெரிய பணி முழுமை அடையவில்லை. அதற்காக மத்திய அரசு பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத்திட்டத்தினை (SGSY) மறுசீரமைத்து, தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (NRLM) ஆஜீவிகா என்ற பெயரில் தேசிய அளவில் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் இத்திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் என வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தொலைநோக்கு கொள்கைகள், மாநில மக்களின் தேவைக்கேற்பவும், ஏழை மக்களின் நிறைவேற்றப்படாத தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கிலும் அமையும்.

### II.1.1.குறிக்கோள் மற்றும் வழி நடத்தும் கொள்கைகள்

**m. குறிக்கோள்**

மிகவும் வறிய நிலையில் உள்ள ஏழை மக்களைக் கண்டறிந்து சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து அவர்களுக்கான நிலைத்த / நீடித்த தன்மையுடைய அமைப்புகளை உருவாக்கி சுயமாக நிர்வாகம் செய்ய பல்வேறு திறன் பயிற்சிகள் மூலம் வலுப்படுத்தி, இலாபம் தரக்கூடிய சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதன் மூலம் அவர்களது வாழ்வாதார நிலையை உயர்த்தி, வறுமையை ஒழிப்பதே தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் குறிக்கோளாகும்.

**ஆ. வழிநடத்தும் கொள்கைகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிநடத்தும் கொள்கைகள் பின்வருமாறு:

- ஏழைகளிடம் இயற்கையாகவே வறுமையிலிருந்து விடுபடுவதற்குத் தேவையான திறமையும் மனோதிடமும் உள்ளது.
- சமூக ஒருங்கிணைப்பு மற்றும் ஏழை மக்களுக்கான அமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் ஏழைகளை ஏழ்மை நிலையிலிருந்து விடுபடச் செய்து அவர்களது திறமைகளை வெளிக்கொணர இயலும்.
- தகவல் பரவலாக்கத்தை எளிதாக்குதல், திறன் வளர்த்தல், திறன் மேம்பாடு அளித்தல், கடன் பெறுவதை எளிதாக்குதல், தொழில் தொடங்க மற்றும் தொடர்ந்து நடத்தத் தேவையான உதவிகளை வழங்குதல் ஆகியவற்றின் மூலம் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த இயலும்.
- மகளிரின் பொருளாதார மேம்பாடு, குடும்பம் மற்றும் சமுதாயத்தில் நேரடியான மற்றும் உறுதியான தாக்கத்தை ஒட்டுமொத்தமாக ஏற்படுத்தும்.

### II.1.2. திட்ட அணுகுமுறைகள்

திட்டம் செயல்படுத்தப்படவுள்ள அனைத்து கிராமங்களிலும் கீழ்க்கண்ட அணுகுமுறைகள் மேற்கொள்ளப்படும்.

- சமூக உள்ளாக்கம் மற்றும் முழுமையான சமூக ஒருங்கிணைப்பு
- ஏழைகளுக்கான மக்கள்அமைப்புகளை உருவாக்குதல்
- நிதி உள்ளாக்கம்
- பொருளாதாரச் செயல்பாடுகள் மூலம் ஏழைகளுக்கு நிலையான வாழ்வாதாரங்களை உருவாக்குதல்
- திறன் மற்றும் வேலை வாய்ப்பு

- சேவைகள் உரியவர்களை சென்றடைவதை உறுதி செய்தல் (சமூக வல்லுநர்கள் மற்றும் சமூகத்தின்பால் பற்று கொண்டு மக்களின் மேம்பாட்டிற்கான நடவடிக்கையில் ஈடுபடுபவர்களின் மூலமாக)
- அரசின் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து நிதி ஆதாரங்களை பெருக்குதல்

### II.1.3. தீவிர செயல்பாடுள்ள kht£l« k‰W« வட்டாரங்களில் மேற்கொள்ளப்படும் செயல்திட்டங்கள்

**அ. மாவட்ட அளவில்** (DMMU)

- தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள்
- தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அறிமுகப் பயிற்சி வழங்குதல்
- வட்டாரம் மற்றும் பகுதி அளவிலான பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல்
- புதுவாழ்வு திட்ட பகுதிகளில் களப் பயணம் மேற்கொள்ளுதல்
- மக்கள் கற்றல் மையம் அமைத்தல்

**ஆ. வட்டார அளவில்** (BMMU)

- தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள்
- வட்டார அளவில் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கும், உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும் அறிமுகப் பயிற்சி வழங்குதல்
- புதுவாழ்வுத் திட்ட பகுதிகளில் களப் பயணம் மேற்கொள்ளுதல்

**இ. பகுதி அளவில் (PFT)**

- தகவல், கல்வி மற்றும் தொடர்பு சாதனங்களை பரவலாக்குதல்
- தொழில் தொகுப்புகளை கண்டறிந்து ஒத்தக் தொழில் குழுக்களை உருவாக்குதல்
- இளைஞர்களின் திறன் மற்றும் தேவைகளின் தொகுப்பினை உருவாக்குதல்

**ஈ. கிராம அளவில்**

- அடிப்படை கள ஆய்வினை மேற்கொள்ளுதல்
- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்து கிராம சபைக்கு தெரிவித்தல்
- மாவட்ட மேலாண்மை அலகு மற்றும் கிராம ஊராட்சிகளின் இடையே தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினை செயல்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம்

- தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள், மக்கள் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு நடத்துதல் தொடர்பான பணிகளை மேற்கொள்ள துவக்க நிதி ஊராட்சிகளுக்கு விடுவித்தல்
- தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகளுக்கான குழுக்களை நியமித்தல்
- தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்
- மக்கள் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு நடத்த சமூக வல்லுநர்களை நியமித்தல்
- ஊராட்சி பிரதிநிதிகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, சுய உதவிக் குழுக்கள் மற்றும் திட்ட பங்காளர்களுக்கு அறிமுகப் பயிற்சி அளித்தல்
- மக்கள் பங்கேற்புடன் மக்கள் நிலை ஆய்வு நடத்தி இளைஞர்கள் தொழில் திறன் விவரத்தொகுப்பு உருவாக்குதல்
- கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தை அமைத்தல்
- விடுப்பட்ட ஏழை மக்களை சுய உதவிக் குழுக்களாக இணைத்தல்
- ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் பயிற்சி மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கான பயிற்சிகள்
- சமூகத் தணிக்கை குழுவை அமைத்தல்
- சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர், சமுதாய மாற்றுத் திறனாளிகள் ஊக்குநர் மற்றும் பழங்குடியினர் சமுதாய ஊக்குநர் ஆகியோரை தெரிவு செய்தல்
- கிராம வறுமை ஒழிப்பு சங்க நிர்வாகிகள், கணக்காளர்கள் மற்றும் சமூகத் தணிக்கை குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்தல்
- சமுதாய செயல்திட்ட கையேட்டினை பரவலாக்குதல்
- மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கான ஆய்வு மற்றும் முகாம்கள் நடத்துதல்
- வாழ்வாதார வளங்களைத் தொகுத்தல்
- கிராம மேம்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்
- கிராம மேம்பாட்டுத் திட்டத்தை மதிப்பீடு செய்து அங்கீகரித்தல்
- மாவட்ட மேலாண்மை அலகு மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களிடையே ஒப்பந்தம்
- கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு முதல் தவணை தொகை விடுவித்தல்
- தொழில் தொகுப்புகளை கண்டறிந்து ஒத்த தொழில் குழுக்களை உருவாக்குதல்

- இளைஞர் தொழில் திறன் பெறுபவர்களை கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் கண்காணித்தல்
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைத்தல்
- சமுதாய முதலீட்டு நிதி வழங்குவதற்காக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மதிப்பீடு செய்தல்
- மாவட்ட மேலாண்மை அலகு, கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிடையே முத்தரப்பு ஒப்பந்தம் செய்தல்
- சமுதாய முதலீட்டு நிதி முதல் தவணை தொகையை விடுவித்தல்

### II.1.4. தீவிர செயல்பாட்டிற்கு உட்படுத்தாத (Non-intensive) kht£l« k‰W« வட்டாரங்களின் செயல்திட்டங்கள்

**அ. மாவட்ட அளவில்**

- தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அறிமுகப் பயிற்சி வழங்குதல்
- புதுவாழ்வு திட்ட செயலாக்க பகுதிகளில் களப் பயணம்
- சமுதாய வளப் பயிற்றுநர்களிலிருந்து சமூக மூலதனங்களை தேர்வு செய்து மேம்படுத்துதல்

**ஆ. வட்டார அளவில்**

- வட்டார திட்ட மேலாளரை தேர்வு செய்தல்
- முன்னோடி கிராமங்களில் தகவல் பரவலாக்க நடவடிக்கைகள்

**இ. முன்னோடி மாதிரி கிராமங்கள்**

- ஒரு வட்டாரத்திற்கு ஒரு ஊராட்சி என்ற விகிதத்தில் 100 முன்னோடி ஊராட்சிகளைத் தேர்வு செய்தல்
- செயல் கூறுகள் அடிப்படையிலான குழுக்களை பணியமர்த்தல்
- சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலையை மதிப்பீடு செய்தல்
- சமுதாய ஒருங்கிணைப்பினை தொடங்குதல்
- சுய உதவிக் குழுக்களின் தரத்தினை உயர்த்துதல்
- அடிப்படை கள ஆய்வினை மேற்கொள்ளுதல்

- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்து கிராம சபைக்கு தெரிவித்தல்
- மாவட்ட மேலாண்மை அலகு மற்றும் கிராம ஊராட்சிகளின் இடையே தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினை செயல்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம்
- மக்கள் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு நடத்துதல்
- கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தினை உருவாக்குதல்
- திறன் மற்றும் கல்வி நிலை குறித்த தொகுப்பினை தயாரித்தல்

**II.1.5. அனைத்து மாவட்டங்களிலுள்ள தீவிர செயல்பாடு மற்றும் சாதாரண செயல்பாடு உள்ள (Intensive & Non-intensive) வட்டாரங்களில் மேற்கொள்ளப்படும் செயல் திட்டங்கள்**

1. **திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு**
    - வேலை வாய்ப்பு நிலை ஆய்வு / மதிப்பீடு
    - வேலை வாய்ப்பு முகாம்
    - இளைஞர் தொழில் திறன்பயிற்சிக்கான மாவட்டத் திறன் மையம்
    - தொழில் முனைவோர் பயிற்சிகள்
    - வேலை வாய்ப்புடன் கூடிய இளைஞர் தொழில் திறன் பயிற்சி
2. **ஒருங்கிணைப்பு மற்றும் ஒன்றிணைத்தல்**
    - வட்டார அளவில் துறை ரீதியான செயல் திட்ட கருத்துப்பட்டறைகள்
    - வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு குழுக்கள்
3. **வாழ்வாதார தொகுப்புகள்**
    - ஒரு மாவட்டத்திற்கு ஐந்து என்ற முறையில் ஒத்த தொழில் குழுக்களை ஊராட்சி மற்றும் பகுதி அளவில் உருவாக்குதல்.
    - ஒரு கிராமம் – ஒரு உற்பத்திப் பொருள் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தொழில் தொகுப்புகளை உருவாக்குதல்.
    - சிறு தொழில் சங்கங்களுடன் இணைப்பு ஏற்படுத்துதல்
    - புதிய யுக்தி அமைப்புகளை உருவாக்குதல்.
    - கல்லூரி மாணவர்களுக்கு சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் மேம்பாட்டில் பயிற்சி அளித்தல்.
4. **நிதி உள்ளாக்கம்**
    - வங்கி நண்பர்களை நியமித்தல்

- அனைத்து ஏழைக் குடும்பங்களுக்கும் நிதி பற்றிய விழிப்புணர்வு
- ஏழைகளுக்கான ஓய்வூதியம் மற்றும் காப்பீட்டு திட்டங்கள்.

**5. சந்தைப்படுத்துதல்**

- மதிப்பு கூட்டுதல் மற்றும் நிலைப்படுத்துதல்
- சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களுக்கு வணிக குறியீடு.
- மாவட்டம் மற்றும் மாவட்டங்களுக்கிடையே சுய உதவிக் குழு பொருட்களை சந்தைப்படுத்துதல்.
- தனியார் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்துதல்.
- மாநில மற்றும் மண்டல அளவில் கண்காட்சி மற்றும் விற்பனை மூலம் சந்தைப்படுத்துவதற்கு வழி வகை செய்தல்.
- வாங்குவோர் மற்றும் விற்போர் சந்திப்பு ( மாவட்ட மற்றும் மண்டல அளவில் )

**6. விருதுகள்**

- சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு விருது
- வங்கியாளர்க்கு விருது

**7. மதிப்பீடு மற்றும் கணிப்பாய்வு**

- மேலாண்மை தகவல் தனிப்பிரிவு
- ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு

**8. தகவல் மற்றும் ஆவணப்படுத்துதல் பிரிவு**

- தகவல் தொடர்பு பரிமாற்ற சாதனங்களை உருவாக்குதல்
- கையேடுகள் மற்றும் பாடத்திட்டங்களை அச்சடித்து விநியோகித்தல்
- ஆவணப்படுத்துதல் மற்றும் பரவலாக்குதல்

### II.1.6. முக்கிய விளைவுகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் மூலம் கீழ்க்கண்ட முக்கிய நன்மைகளை அடைய இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- திறமையாகவும் உணர்வு பூர்வமாகவும் சுய செயல்பாடு கொண்ட திட்ட செயலாக்க அமைப்பினை உருவாக்கி, ஊரக அடித்தட்டு அமைப்புகளை வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்.

- தகுதியுள்ள ஏழை மக்கள் அனைவரையும் அவர்களுக்கான மக்கள் அமைப்புகளில் உறுப்பினராக்குதல்
- தொகுப்பு நிதி நிலையை உயர்த்தி, அதன் மூலம் மக்கள் அமைப்புகள் நியாயமான வட்டியில் வங்கிக் கடன் பெறுவதற்கு வழி வகை செய்தல்
- பல்வேறு திட்டங்களின் நிதி மற்றும் சேவைகளை ஒருங்கிணைத்து அதன் பயன்களை தகுதியுள்ள ஏழை மக்கள் பெற்று மேம்பாடு அடையச் செய்தல்.
- வருமானம் தரக்கூடிய சொத்துக்களில் ஏழை மக்கள் முதலீடு செய்வதன் மூலம் அவர்களது வாழ்வாதாரத்தைப் பெருக்கி உயரிய வருமானத்தைப் பெற வழி வகை செய்தல்.
- இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதன் மூலம் சுய தொழில் மற்றும் உழைப்பூதிய வேலைவாய்ப்பு பெற வழி வகை செய்தல்

## III.சாதனைகள்

### அ. மகளிர் திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 31.03.2012 வரை எய்தப்பட்ட சாதனைகள்

| | |
|---|---|
| சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 5,56,311 |
| உறுப்பினர்களின் எண்ணிக்கை | 85,69,676 |
| ஊரக சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 3,72,092 |
| ஊரக சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | 57,37,023 |
| நகர்ப்புற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 1,84,219 |
| நகர்ப்புற சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | 28,32,658 |
| சுயஉதவிக் குழுக்களின் மொத்த சேமிப்பு | ரூ. 3374.60 கோடி |
| **சுழல்நிதி மற்றும் கடன் இணைப்பு** | |
| சுழல் நிதி வழங்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை | 4,85,822 |
| சுழல் நிதி வழங்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை – ஊரகம் | 3,61,749 |
| சுழல் நிதி வழங்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை – நகர்ப்புறம் | 1,24,073 |
| கடன் இணைப்பு வழங்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை | 4,85,822 |

| | |
|---|---|
| சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த கடன் தொகை | ரூ. 15,633.83 கோடி |
| **பொருளாதாரக் கடன்** | |
| பொருளாதாரக் கடன் வழங்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை | 61,934 |
| பொருளாதாரக் கடனாக விடுவிக்கப்பட்ட தொகை | ரூ. 584.39 கோடி |
| **ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு** | |
| மறுசீரமைக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் | 10,494 |
| ஊக்கத் தொகை வழங்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் | 5,850 |
| பெருங்கடன் வழங்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் | 419 |
| ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்ட பெருங்கடன் மொத்த தொகை | ரூ.100.54 கோடி |
| **குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்பு** | |
| உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் | 399 |
| **திறன் வளர்ப்பு பயிற்சி** | |
| **அ) இளைஞர்களுக்கான திறன் பயிற்சி** | |
| இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கை | 1,08,496 |
| திறன் வளர்ப்பு பயிற்சியின் மூலம் வேலை வாய்ப்பு பெற்றுத்தரப்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கை | 63,890 |
| **ஆ) தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி** | |
| தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை | 17,323 |

அ. 2011–12ம் ஆண்டில் எய்தப்பட்ட சாதனைகள்

| | |
|---|---|
| சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 65,000 |
| உறுப்பினர்களின் எண்ணிக்கை | 9,09,994 |
| ஊரக சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 40,000 |
| ஊரக சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | 5,59,994 |
| நகர்ப்புற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 25,000 |
| நகர்ப்புற சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | 3,50,000 |
| சுயஉதவிக் குழுக்களின் மொத்த சேமிப்பு | ரூ. 401.49 கோடி |
| **சுழல்நிதி மற்றும் கடன் இணைப்பு** | |
| சுழல் நிதி வழங்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை | 35,675 |
| சுழல் நிதி வழங்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை – ஊரகம் | 22,214 |
| சுழல் நிதி வழங்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை – நகர்ப்புறம் | 13,461 |
| சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த கடன் தொகை | ரூ. 4030 கோடி |
| **பொருளாதாரக் கடன்** | |
| பொருளாதாரக் கடன் வழங்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை | 6,964 |
| பொருளாதாரக் கடனாக விடுவிக்கப்பட்ட தொகை | ரூ. 79.39 கோடி |
| **ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு** | |
| பதிவு செய்யப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் | 2,826 |
| ஊக்கத் தொகை வழங்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் | 1850 |
| பெருங்கடன் வழங்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் | 119 |

| | |
|---|---|
| ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்ட பெருங்கடன் மொத்த தொகை | ரூ.27.06 கோடி |
| **குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்பு** | |
| உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் | 239 |
| **திறன் வளர்ப்பு பயிற்சி** | |
| **அ) இளைஞர்களுக்கான திறன் பயிற்சி** | |
| இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கை | 14,734 |
| **ஆ) தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி** | |
| தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை | 4,081 |
| **சந்தைப்படுத்துதல்** | |
| நடத்தப்பட்ட விற்பனை கண்காட்சிகளின் எண்ணிக்கை | 103 |

## இ. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்

### 1. சென்னை – திட்ட மேலாண்மை அலகின் விபரம்

| | |
|---|---|
| **தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி** | தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்<br>அன்னை தெரஸா மகளிர் வளாகம்.,<br>வள்ளுவர் கோட்டம் மெயின் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை – **600 034** |
| **தொலைபேசி எண்** | **044 – 2817 3412 / 044 – 2817 3413** |
| **நிகிரி** | **28173409** |

| | |
|---|---|
| **மின் அஞ்சல்** | tncdwho@yahoo.co.in |
| **இணையதளம்** | http://www.tamilnaduwomen.net |

## 2. திட்ட செயலாக்க அலகின் முகவரி

| | |
|---|---|
| அரியலூர் | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்<br>அரியலூர் – 621 704.<br>04329– 228505 |
| சென்னை | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>எண்.7, தாமோதரன் தெரு<br>கோபாலபுரம்<br>சென்னை – 600 086<br>044– 28110616 |
| கோயம்பத்துார் | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்<br>கோயம்பத்துார் – 641 018.<br>0422–2301855 |
| கடலுார் | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>ராமதாஸ் நாயுடு தெரு |

| | |
|---|---|
| | புதுப்பாளையம்<br>கடலூார் – 607 001.<br>04142–294143 |
| தர்மபுரி | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>2வது தளம், ஹுஹுஹுஊ கட்டிடம்<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்<br>தர்மபுரி –636 705.<br>04342–233298 |
| திண்டுக்கல் | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்<br>தரை தளம்<br>திண்டுக்கல் –624 005.<br>0451–2460050 |
| ஈரோடு | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>1வது தளம் பூமாலை வணிக வளாகம்<br>பெருந்துரை ரோடு, குமளன்குட்டை,<br>ஈரோடு –638 011.<br>0424–2257087 |
| காஞ்சிபுரம் | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்<br>காஞ்சிபுரம் – 631 501<br>044–27236348 |

| | |
|---|---|
| கன்னியாகுமரி | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>பூமாலை வணிக வளாகம்<br>வடசேரி, நாகர்கோவில்<br>கன்னியாகுமரி –629 001.<br>04652–272275 |
| கரூர் | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>அறை எண்.212 (புதிய) 2வது தளம்<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்<br>தாந்தோணிமலை<br>கரூர் –639 005.<br>04324–257377 |
| கிருஷ்ணகிரி | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>எண்.106 மற்றும் 107 , 2வது தளம்<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்<br>கிருஷ்ணகிரி –635 001.<br>04343–235267 |
| மதுரை | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>எண் 22, பெசன்ட் ரோடு<br>சொக்கிகுளம்<br>மதுரை – 625 002.<br>0452–2526220 |
| நாகப்பட்டினம் | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு |

| | |
|---|---|
| | அறை எண்.314, 3வது தளம்<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்<br>நாகப்பட்டினம் –611 003.<br>04365–253061 |
| நீலகிரி | திட்ட செயலாக்க அலகு<br>எண் 274கூ 274 கூ1,<br>அலெக்சாண்டர் காட்டேஜ்<br>பேங்க் லைன், வண்டிசோலை<br>நீலகிரி –643 001.<br>0423–2444435 |
| சிவகங்கை | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>முன்னால் ராணுவவீரா் நல வாரியம்<br>1வது தளம், கான்ஜிரங்கால்<br>சிவகங்கை–623 560.<br>04575–240962 |
| நாமக்கல் | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>மாவட்ட ஆட்சியர் வளாகம், 2வது தளம்<br>நாமக்கல் – 637 003<br>04286–281131 |
| திருநெல்வேலி | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>கூ 86–7வது குறுக்கு தெரு<br>மகாராஜா நகர்<br>திருநெல்வேலி –627 011.<br>0462–2500302 |

| | |
|---|---|
| | |
| பெரம்பலூர் | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்<br>பெரம்பலூர் –621 212.<br>04328–225362 |
| திருவண்ணாமலை | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>எண்.4/15, 7வது தெரு, காந்தி நகர்<br>திருவண்ணாமலை –606 602.<br>04175–227476 |
| புதுக்கோட்டை | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>எண்.52, எழில் நகர்<br>கலெக்டரேட் போஸ்ட்<br>புதுக்கோட்டை– 622 005.<br>04322–230950 |
| தஞ்சாவூர் | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>பிளாட் எண்.சி5, ராமகிருஷ்ணாபுரம்<br>(மணிமண்டபம் அருகில்)<br>புதுக்கோட்டை ரோடு<br>தஞ்சாவூர் – 613 007.<br>04362–277907 |

| | |
|---|---|
| ராமநாதபுரம் | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>1/314, பாரதி நகர்<br>வெளிபட்டிணம் போஸ்ட்<br>ராமநாதபுரம் –623 535.<br>04567–231341 |
| தேனி | திட்ட அலுவலர்<br>திட்ட செயலாக்க அலகு<br>அறை எண் 71, 4வது தளம்<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>தேனி –625 531.<br>04546–255203 |
| திருச்சி | திட்ட அலுவலர்,<br>திட்ட செயலாக்க அலகு,<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>திருச்சி – 620 001.<br>0431–2412726 |
| சேலம் | திட்ட அலுவலர்,<br>திட்ட செயலாக்க அலகு,<br>எண்.207, 2வது தளம்,<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>சேலம் – 636 001.<br>0427–2411552 |
| திருவள்ளூர் | திட்ட அலுவலர்,<br>திட்ட செயலாக்க அலகு,<br>முதல் தளம், மாவட்ட ஆட்சியர் கட்டிடம்,<br>திருவள்ளூர்–602 001. |

| | |
|---|---|
| | 044–27664528 |
| திருவாரூர் | திட்ட அலுவலர்,<br>திட்ட செயலாக்க அலகு,<br>2வது தளம், புதிய மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>திருவாரூர் – 610 101.<br>04366–221031 |
| விழுப்புரம் | திட்ட அலுவலர்,<br>திட்ட செயலாக்க அலகு,<br>தாட்கோ மாளிகை,<br>எண்.62/56ஹ,<br>சென்னை நெடுச்சாலை, (அரசு மருத்துவமனை எதிரில்),<br>விழுப்புரம் – 605 602.<br>04146–223736 |
| தூத்துக்குடி | திட்ட அலுவலர்,<br>திட்ட செயலாக்க அலகு,<br>2வது தளம், மாவட்ட ஆட்சியர்,<br>கோரம்பாலயம்,<br>தூத்துக்குடி – 628 101.<br>0461–2341282 |
| விருதுநகர் | திட்ட அலுவலர்,<br>திட்ட செயலாக்க அலகு,<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>விருதுநகர்–626 001.<br>04562–252036 |

| | |
|---|---|
| வேலூர் | திட்ட அலுவலர்,<br>திட்ட செயலாக்க அலகு,<br>பூமாலை வணிக வளாகம்,<br>(கற்பகம் சூப்பர் மார்க்கேட் எதிரில்)<br>அண்ணா சாலை,<br>வேலூர் – 632 001.<br>0416–2215765 |
| திருப்பூர் | திட்ட அலுவலர்,<br>திட்ட செயலாக்க அலகு,<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>திருப்பூர் –641 604.<br>0421–2218770 |

**இளைஞர் தொழில் திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் கணினி பயிற்சி அளிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியல்**

| நிறுவனத்தின் பெயர் | மாவட்டத்திலுள்ள மையங்களின் எண்ணிக்கை | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி |
|---|---|---|
| HCL இன்ஃபோ சிஸ்டம்ஸ் லிட் | சென்னை – 2<br>மதுரை – 1<br>திருச்சி – 1<br>ஈரோடு – 1<br>திருநெல்வேலி – 1<br>கோயமுத்தூர் – 1 | 299, ஆற்காடு ரோடு,<br>வடபழனி,<br>சென்னை – 600 026<br>தொலைபேசி – 044 42006570 |
| அப்போலோ கம்பியூட்டர் எஜிகேஷன் லிட் | அனைத்து மாவட்டங்களிலும் | முதல் தளம்,<br>ஐஸ்வரியா காம்ப்ளக்ஸ்,<br>4, துரைசாமி ரோடு, தி.நகர்<br>சென்னை – 600 017 |

| | | |
|---|---|---|
| | | தொலைபேசி – 044 24329324 / 25, 24342923 / 5902. |
| சி. எஸ்.சி கம்பியூட்டர் எஜிகேஷன் லிட் | அனைத்து மாவட்டங்களிலும் | 153 & 155, சவுத் வெஸ்ட் போக் ரோடு, தி.நகர் சென்னை – 600 017 தொலைபேசி – 044 45901234 மின்னஞ்சல்: info@iteducationjobs.com |

# தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

## முக்கிய தேதிகள்

- தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் ஆரம்பித்தது : 09.12.1983
- தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியுதவியுடன் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது : 01.09.1989
- மாநில அரசால் மகளிர் திட்டம் தொடங்கப்பட்டது : 04.12.1996
- மத்திய அரசால் பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது : 01.04.1999
- மகளிர்நல மேம்பாட்டு நிறுவனம் ஊராக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு மாற்றப்பட்டது, : 20.07.2006
- மகளிர்நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்பு திட்டம் மாற்றப்பட்டது. : 28.03.2008
- தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் பன்னாட்டு வோளாண்மை வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் : 13.06.2007
  (இப்போது தனித்து செயல்படுகிறது)

## மாநிலத்திலுள்ள வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகள்

- வங்கிகளின் எண்ணிக்கை : 57
- வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை : 6885
- வர்த்தக கிளைகளின் எண்ணிக்கை : 5801
- ஊரக மண்டல வங்கிகளின் எண்ணிக்கை : 248
- மத்திய கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கை : 24
- கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை : 761
- தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை : 4534